//

DEPOSITION OF THE WITNESS

IN THE COURT OF THE DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, RAMESWARAM

**Case no:CC.No.18 /2023**

**prosecution witness: PW-2**

| | | |
|---|---|---|
| Name | : | Caste |
| Fathers Name | : | calling |
| Village | : | Religion |
| Taluk | : | Age |

Accused present.

வாக்குமூலம்

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர், இராமேஸ்வரம்

வழக்கு எண்.

| | | | | |
|---|---|---|---|---|
| பெயர் | : | குகன் | ஜாதி | : |
| க/பெ. | : | | தொழில் | : |
| கிராமம் | : | | சமயம் | : |
| தாலுகா | : | | வயது | : |

**13.02.2024**

முதல் விசாரணை:

நான் பாம்பன் தரவை தோப்பில் வசித்து வருகிறேன். நான் ஆட்டோ ஓட்டுநராக வேலை செய்து வருகிறேன். என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரில் உள்ள முதல் கையொப்பம் என்னுடையது ஆகும். அது அ.சா.ஆ.2 ஆகும். அதை எங்கு எப்போது போட்டு என்று எனக்கு ஞாபகம் இல்லை. போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

(அரசுத் தரப்பு வேண்டுகோளுக்கிணங்க சாட்சியை பிறழ்சாட்சியாக அறிவிக்ககோரி அனுமதி அளிக்கப்ட்டது.)

அரசு தரப்பு குறுக்கு விசாரணை:

போலீசார் விசாரணையில் கடந்த 23.08.2021-ம் தேதி பகல் 12.30 மணியளவில் நானும், மோகன் என்பவரும் பாம்பன் சின்னப்பாலம் இரயில்வே கேட் அருகே மண்பாதையில் சென்று கொண்டிருந்தபோது பாம்பன் காவல்நிலைய சார்பு ஆய்வாளர் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர், வரைபடம் தயார் செய்தார் என்றால் சரியல்ல. அந்த பார்வை மகஜரில் நானும், மோகன் என்பவரும் கையொப்பம் செய்தோம் என்று போலீசார் விசாரணையில் தெரிவித்துவிட்டு தற்போது உண்மையை மறைத்து எதிரிக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல.

ஒம்/-S.இளையராஜா,
மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர்,
இராமேஸ்வரம்

DEPOSITION OF THE WITNESS
IN THE COURT OF THE DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, RAMESWARAM
**Case no:CC.No.18 /2023**
**prosecution witness: PW-3**

| | | | |
|---|---|---|---|
| Name | : | Caste | |
| Fathers Name | : | calling | |
| Village | : | Religion | |
| Taluk | : | Age | |

Accused present.
வாக்குமூலம்
மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர், இராமேஸ்வரம்
வழக்கு எண்.

| | | | | |
|---|---|---|---|---|
| பெயர் | : | மோகன் | ஜாதி | : |
| க/பெ. | : | | தொழில் | : |
| கிராமம் | : | | சமயம் | : |
| தாலுகா | : | | வயது | : |

**13.02.2024**
முதல் விசாரணை:

நான் பாம்பன் தரவை தோப்பில் வசித்து வருகிறேன். நான் ஆட்டோ ஓட்டுநராக வேலை செய்து வருகிறேன். சுமார் 4 வருடங்களுக்கு முன்பு நான் தரவை தோப்பில் நின்று கொண்டிருந்தபோது பாம்பன் காவல்நிலைய போலீசார் வந்து என்னிடம் கையெழுத்து கேட்டார்கள். நான் கையொப்பம் செய்தேன். என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரில் உள்ள இரண்டாவது கையொப்பம் என்னுடையது ஆகும். அது அ.சா.ஆ.3 ஆகும். போலீசார் என்னை விசாரிக்கவில்லை. (அரசுத் தரப்பு வேண்டுகோளுக்கிணங்க சாட்சியை பிறழ்சாட்சியாக அறிவிக்ககோரி அனுமதி அளிக்கப்ட்டது.)

அரசு தரப்பு குறுக்கு விசாரணை:

போலீசார் விசாரணையில் கடந்த 23.08.2021-ம் தேதி பகல் 12.30 மணியளவில் நானும், குகன் என்பவரும் பாம்பன் சின்னப்பாலம் இரயில்வே கேட் அருகே மண்பாதையில் சென்று கொண்டிருந்தபோது பாம்பன் காவல்நிலைய சார்பு ஆய்வாளர் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர், வரைபடம் தயார் செய்தார் என்றால் சரியல்ல. அந்த பார்வை மகஜரில் நானும், குகன் என்பவரும் கையொப்பம் செய்தோம் என்று போலீசார் விசாரணையில் தெரிவித்துவிட்டு தற்போது உண்மையை மறைத்து எதிரிக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல.

ஒம்/-S.இளையராஜா,
மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர்,
இராமேஸ்வரம்

DEPOSITION OF THE WITNESS

IN THE COURT OF THE DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, RAMESWARAM

**Case no:CC.No.18/2023**

**prosecution witness: PW-4**

| | | | |
|---|---|---|---|
| Name | : | Caste | |
| Fathers Name | : | calling | |
| Village | : | Religion | |
| Taluk | : | Age | |

Accused present.

வாக்குமூலம்

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர், இராமேஸ்வரம்

வழக்கு எண்.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | பாலமுருகன் | ஜாதி | : | |
| க/பெ. | : | | தொழில் | : | |
| கிராமம் | : | | சமயம் | : | |
| தாலுகா | : | | வயது | : | |

**13.02.2024**

முதல் விசாரணை**:**

1.நான் தற்சமயம் சார்பு ஆய்வாளாராக பாம்பன் காவல்நிலையத்தில் பணிபுரிந்து வருகிறேன். மேற்படி வழக்கில் அ.சா.1 புகார்தாரர் பிறழ் சாட்சியாக சாட்சியமளித்துள்ளபடியால் வழக்கினை பதிவு செய்த சார்பு ஆய்வாளர் திரு.முனியாண்டி பணி மாறுதலாகவும் சென்றுவிட்டபடியால், ஆவணங்களின் அடிப்படையில் இந்த வழக்கில் நான் கூடுதல் சாட்சியாக சாட்சியமளிக்க அனுமதி வேண்டி அனுமதியின் பெயரில் சாட்சியமளிக்கிறேன்.

2.கடந்த 23.08.2021-ம் தேதி 12.00 மணிக்கு சார்பு ஆய்வாளர் திரு.முனியாண்டி அவர்கள் நிலையப் பொறுப்பில் இருந்தபோது பாம்பன் குந்துகாலை சேர்ந்த கருப்பையா மகன் நாகநாதன் என்பவர் கொடுத்த புகார் மனுவினைப் பெற்று அதன் தன்மைக்கேற்றவாறு நிலையக் குற்ற எண்.207/2021, பிரிவுகள். 294(b), 323 இதச கீழ் வழக்கு பதிவு செய்துள்ளார்.

3. புகார் மனு மற்றும் முதல் தகவல் அறிக்கையை இணைத்து இராமேஸ்வரம் நீதித்துறை நடுவருக்கு சமர்ப்பித்துள்ளார். முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.4 ஆகும்.

4. புகார் மனு, முதல் தகவல் அறிக்கை அசல்களை இராமேஸ்வரம் நீதிமன்றத்திற்கு அனுப்பிவைத்தும், பிற நகல்களை சம்பந்தப்பட்ட உயர்அதிகாரிகளுக்கு அனுப்பிவைத்தும், இவ்வழக்கை சார்பு ஆய்வாளர் முனியாண்டி விசாரணைக்கு எடுத்துக்கொண்டு கடந்த 23.08.2021-ம் தேதி 12.00 மணிக்கு சம்பவ இடம் சென்று சாட்சிகள் குகன் மற்றும் மோகன்

ஆகியோர்கள் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு மாதிரி வரைபடம், பார்வை மகஜர் தயார் செய்துள்ளார். பார்வை மகஜர் அ.சா.ஆ.5 ஆகும். மாதிரி வரைபடம் அ.சா.ஆ.6 ஆகும்.

5. பின்பு சாட்சிகள் நாகநாதன், சக்திவேலு, மகேஷ், கருப்பையா, குகன், மோகன் ஆகியோர்களை தனி தனியாக விசாரித்து வாக்குமூலம் பெற்றுள்ளார்.

6. வழக்கின் எதிரி அந்தோணி என்பவரை 23.08.2021-ம் தேதி இரவு 07.20 மணிக்கு பாம்பன் புளியமரம் பஸ் ஸ்டாப் அருகே வைத்து கைது செய்து நிலையப் பிணையில் விடுவித்துள்ளார்.

7. பின்னர் காயம்பட்ட நபருக்கு சிகிச்சையளித்த மருத்துவர் திரு.ஹசீத் தஸ்லீமா அவர்களை விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்து விபத்து பதிவேடு பெற்றுள்ளார். அந்த விபத்து பதிவேடு அ.சா.ஆ.7 ஆகும்.

8. வழக்கின் சட்டப்பிரிவை 294(b), 323 இதசவிலிருந்து 294(b), 325 இதசவாக மாற்றம் செய்து சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை தாக்கல் செய்துள்ளார். அந்த சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை அ.சா.ஆ.8 ஆகும்.

8. இறுதியாக தனது விசாரணையை முடித்து எதிரிகளின் மீது பிரிவுகள். 294(b), 325 இதச படி குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை:-</u>

1. வழக்கின் சம்பவ இடத்தை நேரில் சென்று பார்வையிடாமல் பின்னிட்டு காவல் நிலையத்தில் வைத்து பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. எதிரிகளை சொன்ன தேதியில் வைத்து கைது செய்யவில்லை என்றால் சரியல்ல.

2. வழக்கிற்கும், எதிரிக்கும் எவ்வித சம்பந்தமும் இல்லை என்றால் சரியல்ல. வழக்கினை சரியாக புலன் விசாரணை செய்யாமல் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. நான் வழக்கு ஆவணங்களின் அடிப்படையில் தான் சாட்சியம் அளிக்கின்றேன் என்றால் சரிதான்.

ஒம்/-S.இளையராஜா,<br>மாவட்ட உரிமையியல் மற்றும்<br>நீதித்துறை நடுவர்,<br>இராமேஸ்வரம்